**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.35/2021**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமமூர்த்தி நாயுடு | மதம் | : இந்து |
| த/பெ | : ராமகிருஷ்ண நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 67 | கிராமம் | : நரசிம்ம நாயுடு கண்டிகை |
| தொழில் : | விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**21.11.2025**
**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

1. வழக்கு சொத்தில் தற்போது என்ன உள்ளது என்றால் வீடு உள்ளது. அந்த வீட்டின் கதவு எண் என்ன என்றால் கதவு எண் ஞாபகமில்லை. எனது பிராதிலும் பிரமாண வாக்குமூலத்திலும் கதவு எண் சொல்லவில்லை என்றால் என்னிடம் வழக்கறிஞர் கேட்கவில்லை. எனவே நான் சொல்லவில்லை. அந்த வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. யார் பெயரில் மின் இணைப்பு உள்ளது என்றால் செங்கம்ம நாயுடு பெயரில் உள்ளது. மின் இணைப்பு எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. செங்கம்ம நாயுடு பெயரில் உள்ள மின் கட்டண ரசீதோ, மின் கட்டண அட்டையோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்து வீடு எந்த தெருவில் உள்ளது என்றால் பிரதான தெருவில் (main road) உள்ளது. வழக்கு சொத்தை செங்கம்ம நாயுடு அனுபவித்து வந்தார் என்பதை காட்ட ஏதேனும் ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அ.வ.எண்.116/1975ல் செங்கம்ம நாயுடு ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கு கோப்புகளை தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும் நான் சொல்வதுபோல் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதற்காக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் என் பெயரில் உள்ள சொத்தை வேறு யாருக்கும் எழுதிவிட கூடாது என்பதற்காக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு

சொத்திற்கான இன்றைய தேதிக்கான வரி ரசீது 2ம் பிரதிவாதி வசந்தி பெயரில் உள்ளது என்றால் இல்லை. 5 வருடங்களாக யாருக்கும் ரசீது போடவில்லை.

3. எனக்கு சிவாடாவில் வேறு ஒரு வீடு உள்ளது என்றால் எனக்கு சிவாடாவில் வீடே இல்லை. வழக்கு சொத்திற்கான இன்றைய தேதிக்கான மின் இணைப்பு 2ம் பிரதிவாதி வசந்தி பெயரில் உள்ளது என்றால் செங்கம்ம நாயுடு பெயரில்தான் உள்ளது. வழக்கு சொத்தில் வீடு, நான்கு கடைகள் உள்ளது என்றால் சரிதான். 2 ஓட்டு வீடு, 1 சீட்டு வீடு, பின்னால் காலியிடம் என உள்ளது. கடைகளில் மணிகண்டன், டில்லிபாபு, கணேசன் ஆகியோர் வாடகைக்கு உள்ளார்கள் என்றால் இல்லை. வழக்கு சொத்தை சுமார் 25 வருடங்களுக்கு முன்பு வசந்தி ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி கடைகளை வாடகைக்கு விட்டு அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை.

4. எனக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லும் செங்கம்ம நாயுடுக்கோ 3ம் பிரதிவாதி ஜெயந்திக்கோ எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. வசந்திக்கு தற்போது 58 வயதாகிறது என்றால் சரிதான். 2015ல் அவருக்கு 48 வயது என்றால் சரிதான். வசந்திக்கு 1984ல் திருமணமானது என்றால் திருமணமாகி இருக்கலாம். அவர் இங்கு ஊரில் இல்லை. ஜெயந்திக்கு 1985ல் திருமணமானது என்றால் திருமணமாகி இருக்கலாம். அவர் இங்கு ஊரில் இல்லை. 2ம் பிரதிவாதியின் மகளுக்கு தற்போது 36 வயதாகிறது என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதியின் மகனுக்கு தற்போது 37 வயதாகிறது என்றால் தெரியாது. 2, 3 பிரதிவாதிகளின் திருமணத்திற்காக வழக்கு சொத்தை விற்றதாகவும் அதை நான் வாங்கியதாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீதுகளும் இந்த வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீதுகளில் நில அளவை எண் குறிப்பிடப்படவில்லை என்றால் என்னிடம் கொடுத்த ரசீதை தாக்கல் செய்தேன். 2ம் பிரதிவாதி வசந்திதான் வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார் என்றாலும் எனக்கு எந்த உரிமையும் அனுபவமும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)